1978 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) 'ஏ' 'பி' பிரிவு பள்ளிகளில் ஒருங்கிணைப்பிற்கான செயற்குறிப்பு அரசின் தீவிரமான பரிசீலனையில் உள்ளது. ஒருங்கிணைப்புகான முடிவு விரைவில் எடுக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ்: வருகிற ஆண்டில் பிளஸ் 2 வகுப்புகள் ஆரம்பிக்கப் படுகிற காரணத்தால், அந்தக் கல்வித் திட்டம் அமுலாவதற்கு முன்னால் துரிதமாக இது அமுலாக்கப்படுமா? இணைப்பு பூர்த்தி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்கு முன்னதாக இந்த ஒருங்கிணைப்பு அமுல் நடத்தப்படும். மேல் உயர்நிலை வகுப்புகளில் பணியாற்ற ஆசிரியர்களுக்கு உயர்வு கிடைப்பதற்கான வகையில் ஒருங்கிணைப்பு முதலிலே நடைபெறும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இப்போது நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுதற்குள்ளேயே அது உருவாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: முடிந்தால் தெரிவிக்கப்படும்.

Tamil Pandits, Grade II.

* 188 *Q.*—THIRU P. R. THOMAS and THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Tamil Pandits Grade II of Government High Schools, appointed prior to 25th February 1971, who have completed 30 years of age, are to be regularised only from 21st March 1974, although they might have received more than three increments; and

(*b*) if so, the reasons therefor?

இரண்டாம் தர தமிழாசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் & திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் 25—2—1971 ஆம் நாளிற்கு முன்பாக வேலைக்கு அமர்த்தப்பட்ட, 30 வயது முடிந்த இரண்டாம் தர தமிழாசிரியர்கள், மூன்றுக்கும் மேலாக உயர் ஊதியம் பெற்ற போதிலும் 21—3—1974 முதற்கொண்டுதான் வேலையில் பணி வரன்முறைப்படுத்தப்படுவர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—1970 முதற்கொண்டு 22—3—1973 வரை நியமிக்கப்பட்டவர்களுக்கு 21—3—1974 முதற்கொண்டு பணி வரன்முறை செய்யப்படுகிறது.

(இ) அரசு (ஆணை) நிலை எண். 428 கல்வி, நாள் 21—3—1974 மற்றும் அரசாணை (நிலை) எண். 765, கல்வி, நாள் 16—5—1974-ல் உள்ள ஆணைக்கேற்ப செய்யப்படுகிறது. அரசாணை (நிலை) எண். 765, கல்வி, நாள் 16—5—1974-ல் 1—4—1970-க்குப்பின் 'பி' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு 21—3—1974-ல் ஒரு வருடத்திற்குக் குறையாமல், பணிக்காலம் நிரம்பப்பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் மற்றும் தனித் தேர்வு பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் பணியையும் 21—3—74 முதல் வரன் முறைப்படுத்த ஆணையிடப்பட்டது.

திரு. பி. ஆர். தாமஸ் : 21—3—1974-ல்தான் வரன்முறைப்படுத்த வேண்டு மென்று விதி இருக்கிறது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1—4—1970 லிருந்து 3—3—73 வரையில் நியமனம் செய்யப்பட்டு 3—8—73-ல் வரன்முறை செய்யப்பட்டவர்களுக்கு முந்திய கால ஊதியமும் நிலுவையும் வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டார்கள். அதே மாதிரி இந்தப் பகுதி யினருக்கும் சலுகை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து யோசனையை கவனத்தில் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த ஆணையின்படி பட்டதாரி ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் ஒரே நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதே நிலையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கும்போது தமிழாசிரியர் களுக்கு ஏன் கொடுக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து நான் பரிசீலிக் கிறேன்.

Salaries of Teachers of Pasumpon Muthuramalinga Thevar College.

* 189 *Q.*—THIRU D. SANTOSHAM and THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers of the Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti, Madurai district, have not been paid their salaries for the last four months;